**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**OS No.25/2022**

2023-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 03-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி/பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

## Cross Examination of PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேந்தர்பாபு | தந்தை பெயர் | சந்திரசேகரன் |
| கிராமம் | தஞ்சாவூர் | தாலுகா | தஞ்சாவூர் |
| சமயம் | இந்து | ஜாதி | |
| வயது | 56 | தொழில் | மருத்துவர் |

நாள் : 03.11.2023
வா.சா.1
குறுக்கு விசாரணை:-

1. தாவா சொத்தின் சர்வே எண் 361/16, அதன் விஸ்திரணம் 2.5 ஏர்ஸ், அது பழைய புல எண் 188/2 ல் கட்டுப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண் 361/16, அதன் விஸ்திரணம் 2.5 ஏர்ஸ், அது பழைய புல எண் 188/2 ல் கட்டுப்பட்டது என்பதை எந்த ஆவணம் அடிப்படையில் நான் சொல்கிறேன் என்றால் மூல கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் சொல்லுகிறேன். மூல கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதன் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அதன் அடிப்படையில் தான் தாவா சொத்தின் பழைய புல எண் 188/2 என்றும் புது புல எண் 361/16 என்றும் சொல்லுகிறேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணம் தான் வா.சா.ஆ.1 என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 இல் தாவா சொத்திற்கான புது சர்வே எண் 361/16 என்றும் அதன் பழைய புல எண் விபரம் 188/2 என்று காணப்பட்டுள்ளதா என்றால் காணப்படவில்லை.

2. தாவா சொத்தின் சொத்து விபரம் எந்த ஆவணத்தை பார்த்து சொல்லப்பட்டது என்றால் 1934 ம் வருடம் என் தாத்தா இரத்தினசாமி செட்டியார் சொஷைட்டி மூலமாக வாங்கப்பட்ட சொத்திற்கான கிரையப்பத்திரத்தை பார்த்து சொல்லப்பட்டது. அந்த பத்திரம் தான் வா.சா.ஆ.1 என்றால் சரிதான், அதன் சான்றிட்ட நகல். வா.சா.ஆ. 1 இல் தாவா சொத்திற்கான சர்வே எண் எழுதப்படவில்லை என்றால் சரிதான். என் தாத்தா கிரையம் பெற்றதாக சொல்லும் சொசைட்டிக்கு தாவா சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணம் உள்ளது என்றால் சரிதான், அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியும். அந்த ஆவணத்தை பார்த்தால் என் தாத்தாவிற்கு கிரையம் கொடுத்த சொசைட்டிக்கு சொத்து எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பது தெரியவரும் என்றால் சரிதான். அவ்வாறு ஆவணங்கள் எதுவும் என்னுடைய வழக்குரையோடு சேர்த்தோ அல்லது

முதல் விசாரணையிலோ தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் தாத்தா இரத்தின சாமி செட்டியார் 06.08.1983 இல் இறந்து விட்டார் என்றால் சரிதான். என் தாத்தா இரத்தின சாமி செட்டியார் 13.09.1934 இல் கிரையம் வாங்கி, 1934 இலிருந்து 1983 வரை என் தாத்தாவோ என் குடும்பத்தினரோ அனுபவம் செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் கொடுக்கவில்லை, வில்லங்க சான்றிதழ் மட்டும் கொடுத்துள்ளோம்.

2.1) 1934 லிருந்து இன்றைய தேதி வரை தாவா சொத்தின் அனுபவம் என் தாத்தா வசமோ என் தந்தை வசமோ என் வசமோ இல்லை என்றால் சரியல்ல. எங்கள் அனுபவத்தில் இல்லை என்பதால் தான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2.2) தாவா சொத்து இன்றைய தேதி வரை அரசு நத்தம் புறம்போக்கு என்று தான் உள்ளது என்றால் என் தாத்தா பெயரில் பட்டா போட்டு கொடுத்துவிட்டார்கள். என் தாத்தா பெயரில் பட்டா போட்டு கொடுத்ததை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் தாத்தா பெயரில் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் பட்டா தான் என்னிடம் காட்டப்படும் வா**.**சா**.**ஆ**. 7** என்றால் சரிதான். என் தாத்தா பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டது 02.07.2018 என்றால் சரிதான். அந்த பட்டா மாறுதல் உத்தரவு வா**.**சா**.**ஆ**.6** ஆக குறியீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ**.6** பின்னிட்டு ரத்து செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா**.**சா**.**ஆ**.6** ரத்து செய்யப்பட்டது சம்மந்தமாக என் பெரியப்பா ராமநாதன் செட்டியாருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, அவர் இறந்து விட்டார்,

2.3) வழக்கு சொத்திற்கு வழக்கு போட்ட தேதியில் யார் பெயரில் பட்டா உள்ளது என்பதை தெரிந்து தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் தாத்தா பெயரில் இருந்தது. நான் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில், வழக்கு சொத்திற்கு என் தாத்தா பெயரில் இருந்த பட்டா இரத்து செய்யப்பட்டது என்பது எனக்கு நன்கு தெரியும் என்றாலும் அதை மறைத்து, என் தாத்தா பெயரில் பட்டா ஏற்பட்டிருப்பதாக பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா**.**சா**.**ஆ**.7** ன் அடிப்படையில் தான் தாவா சொத்தில் என் தாத்தாவிற்கு உரிமை மற்றும் அனுபவம் இருப்பதாக நான் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். அரசு புறம்போக்கு என்று இருந்ததை பட்டா மாறுதல் கோரி மனு கொடுத்தது என்னுடைய பெரியப்பா ராமநாதன் என்றால் சரிதான். மனு கொடுக்கப்பட்ட சமயத்தில் தாவா சொத்து பிரதிவாதிகள் குடியிருந்ததால் தான் அவர்களை அந்த மனுவில் எதிர்மனுதாரர்களாக

சேர்த்து மனு கொடுக்கப்பட்டது என்றால் எங்களுடைய அனுபவத்தில் இருந்ததை அவர்கள் இடையூறு செய்ததால் அவர்களை எதிர்மனுதாரர்களாக சேர்த்து மனு கொடுக்கப்பட்டது.

3) தாவா சொத்திற்கு மின் இணைப்பு உள்ளது என்றால் இல்லை. நீதிமன்றம் மூலமாக ஆணையர் நியமித்து தாவா சொத்து வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்பதை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான், ஆட்சேபணை இல்லை. அந்த வீட்டில் தற்போது பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல, என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு பிரதிவாதி பெயரில் வரி ரசீது ஏற்பட்டுள்ளது என்றால் என்னுடைய அனுபவத்தில் உள்ளது, எனக்கு அது பற்றி தெரியவில்லை.

4) தாவா சொத்தில் நான் செட் போட்டுள்ளதாக சொல்லியுள்ளேன், அதற்கு வரிவிதிப்பு ஏற்பட்டுள்ளதா என்றால் என் தாத்தா காலத்தில் இருந்தது, தற்போது இல்லை. என் தாத்தா காலத்தில் இருந்த வரிவிதிப்புகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கிற்காக சொல்லுகிறேன் என்றாலும் அவ்வாறு எவ்வித ஆவணமும் என் வசம் இல்லை என்றாலும் சரியல்ல.

5) தாவா சொத்திற்கு பழைய சர்வே எண் 188/2 க்கு மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எங்களுடைய 2.5 ஏர்ஸ் அது மொத்தம் எவ்வளவு என்று தெரியாது. 188/2 முழுவதும் நத்தம் என்றால் தாவா சொத்து பட்டா இடம். என்னுடைய பட்டா இடம் 188/2 இல் எந்த இடம் என்றால் வீதிக்கு வடக்கே உள்ளது, மற்ற விபரங்களை புல படத்தில் பார்த்தால் தான் சொல்ல முடியும். 188/2 இல் கண்ட 2.5 ஏர்ஸ் என்னுடைய வழக்குரையில் நான்கெல்லை சொல்லப்படவில்லை என்றால் சொல்லப்படவில்லை. ஏனென்றால் வழக்கு சொத்தின் நான்கெல்லை எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் இருப்பிடம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நான் அனுபவித்து வருவாதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

6) இரத்தினசாமி செட்டியாரின் இதர வாரிசுகள் யாரும் பிரதிவாதி அனுபவம் செய்து வருவதை கேட்கவில்லை, இடையூறு செய்யவில்லை என்றால் தாத்தாவின் இறப்பிற்கு பின்னர் நாங்கள் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டதில் நான் அனுபவம் செய்து வருகிறேன். தாவா கிராமத்தில் எனக்கு பாகம் பிரித்து கொடுத்ததற்கு எனது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் மற்ற சொத்துக்களுக்கு உள்ளது, தாவா சொத்தில் Re survey இல் விட்டுப்போனதால் இதில் என் பெயரில் பட்டா இல்லை. நான் பாகம் பிரித்த காலத்தில் தாவா சொத்தின் பட்டா

யார் பெயரில் இருந்தது என்றால் என் தாத்தா பெயரில் இருந்தது, எந்த வருடம் பாகம் பிரிக்கப்பட்டது என்றால் 1983 இல் என் தாத்தா இறந்த பின்னர்.

6.1) என் தாத்தா பெயரில் இருந்த சொத்து வாய்மொழி பாகப்பிரிவினையில் என் பெயருக்கு ஒதுக்கப்பட்ட பின்னர் Re survey இல் நத்தம் என்று மாறிய பின்னர் அதனை ரத்து செய்ய நான் எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் என் தாயார் முயற்சி செய்தார்கள், அவரும் மருத்துவர் என்பதால் தொடர்ந்து செய்து மாற்ற இயலவில்லை. என் தாயார் மனு கொடுத்ததற்கான நகல் ஏதேனும் என் வசம் உள்ளதா என்றால் இல்லை.

7) நான் என்னுடைய முதல் விசாரணையில் நான் மற்ற வாரிசுகளுக்காகவும் பராமரித்து பாதுகாத்து வருகிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான், என் குடும்பம் அனைவரும் கடந்த 80 வருடங்களாக தஞ்சாவூரில் தான் இருந்து வருகிறோம் என்றால் என் பெரியப்பா கந்தர்வகோட்டையில் தான் இருந்து சொத்தை பராமரித்து வந்தார். கந்தர்வக்கோட்டை கிராமத்தில் சர்வே எண் 188/2 என்ற நத்தத்தில் நிறைய நபர்கள் குடியிருந்து வருகிறார்கள், அவ்வாறு குடியிருக்கும் பகுதிகளுக்கு வரிவிதிப்பு ஏற்பட்டு, அவர்கள் குடியிருக்கும் வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழைய சர்வே எண் 188/2 இல் கட்டுப்பட்டது தான், புதிய சர்வே எண் 358/3. அந்த 358/3 இல் 7 ஏர்ஸ் இடத்திற்கு என் தாயார் கோமதி பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான்.

7.1) சர்வே எண் 358/2 இல் 1/2 ஏர்ஸ்க்கு எனது பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். அதே போன்று சர்வே எண் 158/1 இல் 13.5 ஏர்ஸ்-ல் வீடு உள்ளது என்றால் சரிதான், அது கூட்டுப்பட்டா, அது எங்கள் குடும்பத்தை சேர்ந்த பாலசுப்பிரமணியன், ராமநாதன், முத்துசாமி பெயரில் உள்ளது. பாலசுப்பிரமணியன், ராமநாதன், முத்துசாமி ஆகியோர் என் தந்தை சந்திர சேகருடன் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். இதில் கண்ட சொத்துக்கள் அனைத்தும் என் தாத்தா இரத்தின சாமி செட்டியாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான்.

8) தாவா சொத்து என் தாத்தாவிற்கோ, என் குடும்பத்திற்கோ கட்டுப்பட்டது கிடையாது என்றாலும் அதனால் தான் என் பெயரிலோ அல்லது எங்கள் குடும்பத்தார் பெயரிலோ பட்டா ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதியின் கணவர் எண்ணெய் ஆட்டும் செக்கு வைத்திருந்தார் என்றாலும் இன்னொரு பகுதியில் விறகு போட்டு அனுபவம் செய்து வந்தார் என்றாலும் சரியல்ல, எங்கள் அனுபவத்தில் தான் உள்ளது.

9) தாவா சொத்து என் தாத்தாவின் அனுபவத்திலோ என் குடுபத்தார் அனுபவத்திலோ என் அனுபவத்திலோ இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல, அதனால் இந்த வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.